## பாடசாலைகளில் கத்திகள் வைத்திருப்பது குறித்த விதிமுறைகள்

அன்புடைய பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பளர்களுக்கு,

பாடசாலைகளில் கத்திகள் வைத்திருப்பதைப் பற்றிய விதிமுறைகளில் தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்காக சீக்கிய சமூகப் பிரமுகர்களுடனும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு வல்லுநர்களுடனும் நெருக்கமாகச் செயல்பட்டு சமூகக் கலந்தாய்வு ஒன்றை NSW அரசாங்கம் சமீபத்தில் மேற்கொண்டது.

இந்தக் கலந்துரையாடல்களில் பங்கேற்று தமது கருத்துக்களைத் தெரிவித்த அனைத்து சமூக அங்கத்தவர்களுக்கும் மற்றும், மாணவ-மாணவி ஒருவர் பாடசாலையில் கத்தி ஒன்றை வைத்திருப்பதற்கான சூழ்நிலைகளை குறிப்பிட்டுக் காட்டும் மீள்பார்வையிடப்பட்ட வழிகாட்டல்களின் உருவாக்கத்தில் உதவியாக இருந்தவர்களுக்கும் ‘திணைக்களம்’ நன்றி நவில்கிறது.

மாணவ-மாணவிகள் மற்றும், பாடசாலை ஊழியர்களுடைய சுகாதாரம் மற்றும் பாதுகாப்பிற்கு ஏற்படக்கூடிய ஆபத்துகளிலிருந்து அவர்களைப் பாதுகாக்கவும், NSW சமூகங்களின் பன்முகத்-தன்மைக்கு மதிப்பளிக்கவும், சட்டவிரோத பாரபட்சச் செயல்களைத் தவிக்கவும் தன்னால் இயலுமானதைச் செய்ய ‘திணைக்களம்’ கொண்டிருக்கும் பற்றுறுதியினை இந்த வழிகாட்டல்கள் பிரதிபலிக்கின்றன.

பாடசாலைக்குள் கத்திகள் கூடாது என்ற தடை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும், ஆனாலும், கண்டிப்பான புதிய வழிகாட்டல்களை மாணவ-மாணவியர்கள் பின்பற்றுவார்களேயானால், ‘கிர்ப்பான்’ ஒன்றை மாணவ-மாணவி ஒருவர் அணிவதை இது தடுக்காது. ‘கிர்ப்பான்’ என்பது கத்தியைப் போன்ற ஒரு பொருளாகும், மற்றும் தமது மத நம்பிக்கையின் அடையாளமாக ஞான-ஸ்நானம் பெற்ற சீக்கியர்கள் அணியும் இது மதரீதியான முக்கியத்துவத்தினைக் கொண்டது.

பாடசாலையில் இருக்கும்போது ஞான-ஸ்நானம் பெற்ற சீக்கிய மாணவ-மாணவியர் ஒருவர் ‘கிர்ப்பான்’ ஒன்றை அணிய அனுமதிக்கப்பட வேண்டுமென்றால், அது பின்வருமாறு இருப்பது அவசியம்:

- முழு நீளம் 16.5 செண்ட்டிமீட்டர் (ஏறத்தாழ 6.5 அங்குலம்) அல்லது அதற்குக் குறைவான நீளம் உள்ளதாக சிறியதாகவும், கூர்மையான முனைகள் அல்லது ஒரங்கள் இல்லாததாகவும் இருக்கவேண்டும்
- கத்தியை வெளியே உருவ இயலாத வகையில் கத்தி உறையுடன் சேர்த்துப் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்
- ‘கிர்ப்பான்’ உடுப்புகளுக்கு உள்ளாகவும், பயன்படுத்தப்பட இயலாத வகையிலும் அணியப்படவேண்டும்
- விளையாட்டுகள் போன்ற உடல்ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபடும் பொழுது ‘கிர்ப்பான்’ அகற்றப்பட்டு பாதுகாப்பான இடத்தில் வைக்கப்படவேண்டும், அல்லது உடலோடு சேர்த்து இறுக்கமாகக் கட்டப்படவேண்டும்.

**குறிப்பு:** “உடலோடு சேர்த்துக் கட்டப்பட்டது” என்றால், வலுவான துணி ஒன்றில் சுற்றப்பட்டு விளையாட்டு-வீரர்கள் அணியும் பட்டை அல்லது தோல் வார்ப்பட்டை ஒன்றைப் பயன்படுத்தி வழுவி வெளிவராத வகையில் அல்லது அதை அணிந்திருப்பவருக்கோ அல்லது மற்ற ஒருவருக்கோ காயம் ஏற்படுத்தாத விதத்தில் அது அணியப்படவேண்டும்.

நியாயமான முறையில் வேண்டப்படும் பொழுது, இந்த வழிகாடல்கள் பின்பற்றப்படுகின்றன என்பதை மாணவ-மாணவியர்கள் உறுதிப்படுத்த வேண்டும். பாதுகாப்பு குறித்த கரிசனங்கள் எதுவும் மாணவ-மாணவியருடனும் அவர்களுடைய பெற்றோர் அல்லது பராமரிப்பாளர்களுடனும் கலந்துபேசப்படும்.

ஞான-ஸ்நானம் பெற்ற சீக்கிய மாணவ-மாணவியர்களால் 'கிர்ப்பான்' ஒன்றை அணிய இயலும் எனும் அதே வேளையில், வேறெந்த காரணத்திற்காகவும் பாடசாலையில் அதைப் பயன்படுத்த அவர்கள் அனுமதிக்கப்படமாட்டர்.

கல்வி நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டாலொழிய, (உதாரணமாக, உணவுத் தொழில்நுட்ப செயல்முறை வகுப்புகள்) வேறெந்த சூழல்களிலும் கத்தி ஒன்றை வைத்திருப்பதற்கான அனுமதி மாணவ-மாணவியருக்குக் கிடையாது.

பாடசாலை முடிந்த பிறகு நேரடியாக TAFE வகுப்பு ஒன்றிற்குச் செல்லும் மாணவ-மாணவியர்கள் கத்தி ஒன்றைக் கொண்டுவரலாம், மற்றும் இவர்கள் கத்தியை உறை அல்லது பெட்டி ஒன்றில் வைத்து பாடசாலைக்கு வரும்பொழுது பாடசாலை அலுவலகத்தில் கொடுக்கவேண்டும், மற்றும் பாடசாலை முடிந்த பிறகு அதை அங்கிருந்து பெற்றுச்செல்ல வேண்டும்.

புதிய வழிகாட்டல்களைப் பற்றிய கூடுதல் தகவல்களைப் பெறுவதற்கான வலைத்தலம்: https://education.nsw.gov.au/about-us/rights-and-accountability/legal-issues-bulletins/knives-in-schools

இந்தப் புதிய விதிமுறைகளின் அமலாக்கத்தினை இலகுவானதாகச் செய்வதற்காக, இந்த ஏற்பாடுகளைப் பற்றி உள்ளூர் சீக்கிய சமூகத்தைச் சேர்ந்த பிரமுகர்களுடனும், அங்கத்துவர்களுடனும் கலந்துரையாடுவதில் மகிழ்ச்சியடைவேன்.

"ஆஸ்திரேலிய சீக்கிய சங்க'(Australian Sikh Association (ASA))த்துடன் இணைவாக அவர்களுடைய கோவிலில் இருந்தும் ஞான-ஸ்நானம் பெற்ற சீக்கிய மாணவ-மாணவியர்களது குடும்பத்தினர் மேலதிக வழிகாட்டல்களை நாடலாம்.

இந்தத் தகவல்களைப் பற்றிய கேள்விகள் எதுவும் உங்களுக்கு இருந்தால், அவற்றைப் பற்றிய கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வதற்கான நேரம் ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள தயவு செய்து பாடசாலையுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொள்ளுங்கள்.

உங்கள் உண்மையுள்ள

பாடசாலை அதிபர் (Principal)

## தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை

இன்னும் கூடுதலான தகவல்கள் உங்களுக்குத் தேவைப்பட்டாலும், உங்களுடைய விசாரிப்பில் உங்களுக்கு உதவ மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் தேவைப்பட்டாலும், 131 450-இல் 'தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை'யை அழைத்து உங்கள் மொழியில் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள். நீங்கள் அழைக்க விரும்பும் இலக்கத்தினை தொலைபேசி இயக்குநருக்குச் சொல்லுங்கள், உங்களுடைய உரையாடலில் உங்களுக்கு உதவுவதற்காக மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை அவர் இணைப்பிற்குக் கொண்டுவருவார். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது.